


21.02.2025 - 1.45 PM

தலைப்பு செய்திகள்

- வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட வேகமும், உத்வேகமும் தேவை என்று பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.
- கல்வியை சர்வதேச தரத்திற்கு மேம்படுத்துவதே தேசிய கல்விக்கொள்கையின் நோக்கம் என்று மத்திய கல்வியமைச்சர் திரு தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.
- கடலூர் மாவட்டத்தில் 705 கோடி ரூபாய் மதிப்பில் முடிவடைந்த பல்வேறு திட்டப்பணிகளை முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்றுமாலை தொடங்கிவைக்கிறார்
- தாய்மொழி தினமான இன்று தமிழ்மொழியை போற்றுவோம் என்று மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் தெரிவித்துள்ளார்.
- கத்தார் ஓப்பன் டென்னிஸ் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி, குரேஷியாவின் இவான் இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

இனி விரிவான செய்திகள்

❖❖❖❖❖❖❖

பிரதமர்

நம்நாடு உலகளாவிய ஆற்றல் மையமாக உருவாகி வருவதால் அனைத்து துறைகளிலும் எழுச்சிமிகு தலைவர்களின் தேவையை பிரதமர் திரு. நரேந்திரமோடி வலியுறுத்தியுள்ளார்.

புதுதில்லி பாரத் மண்டபத்தில் தலைமைத்துவ மாநாட்டில் இன்று உரையாற்றி பிரதமர், சர்வதேச தேசிய நிலைகளில் சிறப்பாக செயலாற்றுபவர்களை இம்மாநாடு மேலும் பண்படுத்தும் என்றார்.

தேசிய கட்டமைப்பில் ஒவ்வொரு குடிமகனின் வளர்ச்சியும், மிக முக்கியமானது என்று கூறிய பிரதமர், வளர்ச்சியடைந்த பாரத பாதையில் தலைமைத்துவ உருவாக்கம் இன்றியமையா அங்கமாக உள்ளது என்றார்.

வளர்ச்சியடைந்த பாரத இலக்கை எட்ட வேகமும், உத்வேகமும் தேவை என்று எடுத்துரைத்தார்.

முன்னதாக இந்நிகழ்ச்சியில் பேசிய பூட்டான் பிரதமர் ஷெரிங் டாப்கே, பிரதமர் திரு. நரேந்திரமோடியின் சிந்தனையில் உதித்த தலைமைத்துவ உருவாக்க இயக்கம், சிறந்த தலைவர்களை உருவாக்கும் அவரது அர்ப்பணிப்பை புலப்படுத்துவதாக பாராட்டு தெரிவித்தார்

இதனிடையே பிரதமர் வரும் திங்கட்கிழமை, பிரதமரின் வேளாண் நிதியுதவி திட்டத்தின் 19-வது தவணை தொகையை பீஹார் மாநிலம் பகல்பூரிலிருந்து விவசாயிகளின் வங்கி கணக்குகளில் விடுவிக்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

தர்மேந்திர பிரதான்

தமிழ் கலாச்சாரத்தையும், தமிழ்மொழியையும் பிரபலப்படுத்தி முன்னெடுத்துச் செல்வதில் நரேந்திரமோடி அரசு அர்ப்பணிப்புடன்

செயலாற்றுவதாக மத்திய கல்வியமைச்சர் திரு.தர்மேந்திரபிரதான் தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலினுக்கு அமைச்சர் எழுதியுள்ள கடிதத்தில் கல்வியை அரசியலாக்காமல் அரசியல் வேறுபாடுகளை தாண்டி மாணவர்களின் நலனை கருத்தில் கொண்டு தேசிய கல்விக்கொள்கையை செயல்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்.

எந்தவொரு மொழியையும் திணிப்பது தேசிய கல்விக் கொள்கையின் நோக்கமல்ல என்று கூறியுள்ள கல்வியமைச்சர், பி.ஜே.பி. ஆட்சியில் இல்லாத பிற மாநிலங்களும் அரசியல் வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு இக்கல்விக்கொள்கையை நடைமுறைப்படுத்தி இருப்பதை சுட்டிக்காட்டினார்.

சீர்த்திருத்தங்களையும், தொலைநோக்கு பார்வையையும் அடிப்படையாக கொண்ட தேசிய கல்விக்கொள்கையை செயல்படுத்துவது குறித்து தமிழகம் மறுஆய்வு செய்ய வேண்டுமென்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

கல்வியை சர்வதேச தரத்திற்கு முன்னெடுத்துச் செல்வதே தேசிய கல்விக்கொள்கை 2020-ன் நோக்கம் என்றும், இக்கல்விக் கொள்கை பரந்த அறிவுத்திறனுக்கு வகை செய்வதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசியல் காரணங்களுக்காக இக்கொள்கையை தமிழகம் தொடர்ந்து புறக்கணிப்பதால் மாணாக்கர், ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்கள், பல்வேறு வாய்ப்புகளையும், வள ஆதாரங்களையும் இழக்க நேரிடுவதாக அமைச்சர் கவலை வெளியிட்டுள்ளார்.

சமக்ர சிக்ஷா திட்டம், தேசிய கல்விக்கொள்கை 2020 உடன் இணைந்திருப்பதையும் அவர் சுட்டிக்காட்டினார்.

ஒவ்வொரு மாணவரும் தாய்மொழியிலேயே கல்வி கற்பதன் மூலம் தரமான கல்வியை பெறமுடியும் என்று கூறியுள்ள அமைச்சர்,

தமிழ்மொழி பிராந்திய அடையாளம் மட்டுமல்ல, அதுவொரு தேசிய பொக்கிஷம் என்று குறிப்பிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

ஜே.பி.நட்டா

மத்திய அரசின் சுகாதார காப்பீடு திட்டங்களால் நோயாளிகளின் பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய சுகாதார குடும்பநலத்துறை அமைச்சர் திரு.ஜே.பி.நட்டா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் 12-வது சர்வதேச சுகாதார மாநாட்டில் இன்று உரையாற்றியஅவர், 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்கள் எவ்விர நிபந்தனையுமின்றி பயனடையும் வகையில் ஆயுஷ்மான் சுகாதார காப்பீடு திட்டம் விரிவுபடுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டினார்.

இந்த திட்டங்களால் பொதுமக்களின் மருத்துவ செலவுகள் குறைந்துள்ளதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

ஜக்தீப் தன்கர்

உலகளவில் பெரும் மருத்துவ சவாலாக உருவாகியுள்ள மனநலத்திற்கு தியானம் ஒரு சிறந்த தீர்வாக அமையும் என்று குடியரசு துணைத்தலைவர் திரு. ஜக்தீப்தன்கர் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் இதுதொடர்பான மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், ஐ.நா.வின் நிலையான வளர்ச்சி இயக்கத்தோடு இம்மாநாடு இணைந்து நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

5 ஆயிரம் ஆண்டுகள் பழமையான கலாச்சார சிறப்பு கொண்ட இந்தியாவில் தியான மாநாட்டிற்காக பல்வேறு நாட்டு தலைவர்கள் குழுமியிருப்பது குறித்து மகிழ்ச்சி வெளியிட்டுள்ளார்

நீடித்த நிலையான வளர்ச்சிக்கு ஏற்பட்ட தடையே காலநிலை மாற்ற பிரச்சனையாக தற்போது உருவாகி உள்ளது என்றும் திரு. தன்கர் கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர்

முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின், கடலூர் மாவட்டத்தில் 704 கோடியே 89 லட்சம் ரூபாய் மதிப்பில் முடிவுற்ற திட்டப்பணிகளை இன்று தொடங்கிவைப்பதோடு, 384 கோடி ரூபாய் மதிப்பில், 178 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

தொடர்ந்து 11 ஆயிரத்து 716 பயனாளிகளுக்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளையும் வழங்கவுள்ளார்.

❖❖❖❖❖❖❖

முதலமைச்சர் நிதியுதவி

இதனிடையே கேரள மாநிலம் மூணாறு பகுதியில் நேரிட்ட சாலை விபத்தில் உயிரிழந்த தனியார் கல்லூரி மாணாக்கர் 3 பேரின் குடும்பத்தினருக்கு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து தலா 3 லட்சரூபாய் நிதியுதவியை முதலமைச்சர் அறிவித்தார்.

இவ்விபத்தில் காயமடைந்து சிகிச்சை பெற்று வருவோருக்கு தலா ஒருலட்ச ரூபாய் வழங்கப்படும் என்றும் அவர் உத்தரவிட்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

உலக தாய்மொழி தினம்

உலக தாய்மொழிதினம் இன்று கொண்டாடப்படுகிறது.

இந்நாளையொட்டி மத்திய தகவல் ஒலிபரப்புத்துறை இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் வெளியிட்ட செய்தியில்,

எண்ணற்ற மொழிகளுக்கு ஆதி மொழியாய் வேரூன்றி நிற்கும் தமிழ்மொழியை பெருமையுடன் போற்றுவோம் என கூறியுள்ளார்.

முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் விடுத்துள்ள செய்தியில் போற்றுதலுக்குரிய பழமையான தமிழ்மொழி தனித்து இயங்கும் ஆற்றல் கொண்ட செம்மொழியாக திகழ்கிறது என்று புகழாரம் சூட்டியுள்ளார்

தமிழ்நாட்டின் அனைத்து மாவட்டங்களிலும் ஆட்சித்தலைவர் தலைமையில் “தமிழ்மொழியை காப்போம்” உறுதிமொழி ஏற்கப்பட்டது.

❖❖❖❖❖❖❖

கே.என்.நேரு

தமிழகத்தில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளை விரைந்து நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கப்படும் என்று மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு. கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி கலையரங்கில் திருச்சி, தஞ்சை, புதுக்கோட்டை, அரியலூர், பெரம்பலூர் ஆகிய மாவட்டங்களில் செயல்படுத்தப்படும் வளர்ச்சித்திட்டப் பணிகளின் முன்னேற்றம் குறித்த ஆலோசனை கூட்டத்தில் உரையாற்றியஅவர், சாலைகள் அமைத்தல், குடிநீர் வசதி உள்ளிட்ட பணிகளுக்கும் முக்கியத்துவம் அளிக்கப்பட்டு வருவதாக கூறினார்.

❖❖❖❖❖❖❖

அன்பில் மகேஷ்

கல்விதரத்தில் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக தமிழகம் திகழ்வதாக மாநில பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் திரு. அன்பில் மகேஷ் பொய்யாமொழி தெரிவித்துள்ளார்

திருச்சியில் இன்று செய்தியாளர்களிடம் பேசியஅவர், மாநிலத்தில் இருமொழிக்கொள்கை பின்பற்றப்படும் என்று கூறினார்.

தமிழக மாணவர்கள் பல்வேறு துறைகளில் தலைச்சிறந்து விளங்குவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

❖❖❖❖❖❖❖

கோ.வி.செழியன்

சென்னை கிண்டி தொழிற்பயிற்சி நிலையத்தில் நடைபெறும் விரிவுரையாளர்களுக்கான பயிற்சியினை மாநில உயர்கல்வித்துறை அமைச்சர் திரு.கோ.வி.செழியன் இன்று ஆய்வு செய்தார்.

பல்வகை தொழில்நுட்ப கல்வி விரிவுரையாளர்களுக்கு அளிக்கப்படும் பயிற்சியின் தன்மைகள் குறித்தும் அவர் கேட்டறிந்தார்.

❖❖❖❖❖❖❖

மா.சுப்ரமணியன்

சென்னையில் நடைபெற்ற சித்த மருத்துவம் தொடர்பான சர்வதேச மாநாட்டில் மாநில மருத்துவம் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் திரு.மா.சுப்ரமணியன் இன்று அகத்தியம் 2025 என்ற நூலினை வெளியிட்டார்.

❖❖❖❖❖❖❖

அன்புமணி ராமதாஸ்

தமிழக பள்ளிகளில் புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்ட 3 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு பணி நியமன ஆணைகளை உடனடியாக வழங்க வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர். அன்புமணி ராமதாஸ், மாநில அரசை வலியுறுத்தியுள்ளார்.

சென்னையில் இன்று அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், 2 ஆயிரத்து 768 இடைநிலை ஆசிரியர் பணியிடங்களுக்கு நடத்தப்பட்ட போட்டித்தேர்வுகளில், விடைத்தாள்களை திருத்தும்

பணியை விரைந்து தொடங்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டுள்ளார்.

❖❖❖❖❖❖❖

சிவகங்கை - வாய்ஸ்

சிவகங்கை மாவட்டத்தில் 4வது புத்தக திருவிழாவை மாநில கூட்டுறவுத்துறை அமைச்சர் திரு.கே.ஆர்.பெரியகருப்பன் இன்று துவக்கிவைத்தார்.

இதுகுறித்து எமது செய்தியாளர்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

நீலகிரி – வாய்ஸ்

நீலகிரி மாவட்டம் தெப்பக்காடு யானைகள் முகாமில், வெயிலின் தாக்கம் அதிகமாக இருப்பதால், யானைகள் காலை, மாலை இருவேளைகளிலும் நீராட்டப்படுவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

தஞ்சாவூர் – வாய்ஸ்

கும்பகோணம் ஐராவதேஸ்வரர் திருக்கோவிலில், சென்னை மற்றும் கும்பகோணத்தை சேர்ந்த ஓவியக்கல்லூரி மாணாக்கர் ஆலயத்தின் சிற்பங்களை வரையும் பயிற்சியில் ஈடுபட்டு வருகின்றனர்.

இதுகுறித்து சென்னை கவின் கல்லூரியை சேர்ந்த மாணவி ஒருவர் தெரிவிக்கையில்

.. வாய்ஸ் ..

❖❖❖❖❖❖❖

இருவரி

மத்தியஅரசு பணியாளர் தேர்வாணையம் சார்பாக நடத்தப்படும் UPSC முதல்நிலை தேர்விற்கு இணையதளம் வாயிலாக விண்ணப்பிக்க இன்று கடைசிநாளாகும்.

பெரம்பலூர் மாவட்டத்தில் சிறு குறு நடுத்தர தொழில் நிறுவனங்களுக்கு விழிப்புணர்வு முகாம் வரும் 25-ம் தேதி நடைபெறவுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ்பச்சாவ் தெரிவித்துள்ளார்.

ஈரோடு மாவட்டத்தில் 8-ம் வகுப்பு பயிலும் மாணாக்கருக்கு தேசிய வருவாய் வழி மற்றும் திறன் படிப்புதவி திட்டத்தேர்வு நாளை நடைபெறவுள்ளது.

26 மையங்களில் நடைபெறும் இத்தேர்வை 6 ஆயிரத்து 720 மாணாக்கர் எழுதவுள்ளனர்.

விழுப்புரம் மாவட்டத்தில் புத்தக கண்காட்சி அடுத்தமாதம் 2-ம் தேதி தொடங்கி 12-ம் தேதிவரை நடைபெறவுள்ளது.

நாகை இலங்கை காங்கேசன் துறைமுகம் இடையே கப்பல் போக்குவரத்து மீண்டும் நாளை தொடங்கவுள்ளது.

செவ்வாய்கிழமை நீங்கலாக இதர நாட்களில் இந்த கப்பல் இயக்கப்படும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

நெல்லை மாவட்டத்தில் அய்யா வைகுண்ட சாமியின் பிறந்தநாளையொட்டி மாவட்டத்திற்கு வரும் 4-ம் தேதி விடுமுறை அளிக்கப்படுவதாக ஆட்சித்தலைவர் திரு.சுகுமார் தெரிவித்துள்ளார்.

இதற்கு ஈடாக அடுத்தமாதம் 15-ம் தேதி வேலை நாளாக இருக்கும் என்று கூறியுள்ளார்.

❖❖❖❖❖❖❖

கத்தார் - டென்னிஸ்

கத்தார் ஓப்பன் டென்னிஸ் போட்டியின் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் யூகிபாம்ப்ரி, குரேஷியாவின் இவான் இணை - இங்கிலாந்து இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

புனே - டென்னிஸ்

புனேவில் நடைபெறும் சேலஞ்சர்ஸ் டென்னிஸ் போட்டியில் ஆடவர் இரட்டையர் அரையிறுதியில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன், விஜய்சுந்தர் பிரசாந்த் இணை - கலியாண்ட பூனாச்சா, ஜான்லாக் இணையை இன்று எதிர்கொள்கிறது.

❖❖❖❖❖❖❖

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது.

❖❖❖❖❖❖❖